ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 2139/58 - 2019 සැප්තැම්බර් මස 05 වැනි බ්‍රහස්පතින්දා - 2019.09.05
*2139/58 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 05 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

*39 அ (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*2013 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 04 ஆந் திகதிய 1830/51 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் (அத்தியாயம் 460) பிரசுரிக்கப்பட்ட 2013 ஆம் ஆண்டின் 299 ஆம் இலக்க காணி எடுத்தற் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் காப்பு வாசகம் (அ) வின் கீழான கட்டளையில் விபரிக்கப்பட்ட காணித்துண்டுகள் முழுமையாக அரசுரித்தாக்கப்பட்டுள்ளதோடு, அரசின் சார்பில் அச்சட்டத்தின் 40 ஆம் பிரிவின் (அ) பந்தியின் கீழ் இக் காணித்துண்டுகளின் உடைமையும் பொறுப்பேற்கப்பட்டுள்ளன. எனினும் அச் சட்டத்தின் (1979 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினால் உட்புகுத்தப்பட்ட) 39 (அ) ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் கயந்த கருணாதிலக்க ஆகிய நான், குறித்த காணித் துண்டுகளில் கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணித்துண்டினை இக் கட்டளை மூலம் உரித்து நீக்குகின்றேன்.*

கயந்த கருணாதிலக்க,
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர்.

எனது இல : 4-3/10/2012/எல்ஆர்பீ/115.
காணி எடுத்தற் உத்தியோகத்தரின் இல.: WGSWD&EIP/ACQ/MH/05
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு,
"மிஹிகத மெதுர", இல. 1200/6, காணிச் செயலகம்,
ரஜமல்வத்தை வீதி, பத்தரமுல்லை,
2019, செத்தெம்பர் 03.

**அட்டவணை**

மேல் மாகாணத்தில், கொழும்பு மாவட்டத்தில், மஹரகம பிரதேச செயலாளர் பிரிவில், 526 பி கங்கொடவில தெற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில், கங்கொடவில கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2018.01.24 ஆந் திகதிய சீஓ/டீஎஸ்ஓ/2017/374 ஆம் இலக்க விளக்கப்படுத்தும் வரைபடத்தில் விபரமாக காட்டப்பட்ட கீழ் விபரிக்கப்பட்டுள்ள எல்லைகளுள் அமைந்த காணித் துண்டுகள் :

**1. துண்டு ஏ - கலேகும்புர மற்றும் ஓவிட்ட, மானெல்மல் கும்புர, மானெல் கும்புர மற்றும் ஓவிட்ட - விஸ்தீரணம் : 0.0092 ஹெக்டயார்**
வடக்கு : மானெல் மாவத்த ; கிழக்கு : வ. இ. 61/35 பரண கெஸ்பேவ வீதி ; தெற்கு : துண்டு பீ ; மேற்கு : ஆ. வ. கொ. 9583 இன் துண்டு இல. 25.

**2. துண்டு பீ - கலேகும்புர மற்றும் ஓவிட்ட, மானெல்மல் கும்புர, மானெல் கும்புர மற்றும் ஓவிட்ட - விஸ்தீரணம் : 0.0106 ஹெக்டயார்**
வடக்கு : துண்டு ஏ ; கிழக்கு : வ. இ. 61/35 பரண கெஸ்பேவ வீதி ; தெற்கு : துண்டு சீ ; மேற்கு : ஆ. வ. கொ. 9583 இன் துண்டு இல. 25.

09 - 671

1A – G30905 - 26 (2019/09) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.

இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.